## November 19, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. திட்டம் தொடங்கிய பின்னர் விதிவிலக்கான சூழல் ஏற்பட்டால், அதற்கான சுற்றுச் சூழல் அனுமதியை முன்தேதியிட்டு வழங்கத் தடையில்லை என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.
   - i. மேலும், சுற்றுச்சூழல் அனுமதிகளை மத்திய அரசு முன்தேதியிட்டு வழங்கத் தடை விதித்து கடந்த மே மாதம் அளித்த தீர்ப்பை உச்சநீதிமன்றம் திரும்பப் பெற்றுக்கொண்டது.
   - ii. பொதுத் திட்டங்களைத் தொடங்கிய பின்னர், அந்தத் திட்டங்களுக்கு முன்தேதியிட்டு சுற்றுச்சூழல் அனுமதி அளிக்க மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் 2017-ஆம் ஆண்டு அறிவிக்கை வழிவகுத்தது. அந்த அறிவிக்கையைப் பின்பற்றி மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் 2021-ஆம் ஆண்டு அலுவலக குறிப்பாணை ஒன்றையும் வெளியிட்டது.
   - iii. அந்த அறிவிக்கையும், குறிப்பாணையும் சுற்றுச்சூழல் அனுமதிகளை முன்கூட்டியே பெறாமல் கட்டுமானம் தொடங்கப்பட்ட திட்டங்களின் செயல்பாடுகளை அபராதம் செலுத்தி முறைப்படுத்திக்கொள்ள வழிவகுத்தன.
   - iv. இந்த அறிவிக்கையை உச்சநீதி மன்ற நீதிபதிகள் ஏ.எஸ்.ஓகா.உஜ்ஜல் புயான் ஆகியோர் அடங்கிய அமர்வு கடந்த மே மாதம் ரத்து செய்தது.
2. கோவைகொடிசியா வளாகத்தில் புதன்கிழமை (நவ.19) முதல் 3 நாள்கள் நடைபெறும் வேளாண்மை மாநாட்டை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைக்கிறார்.
   - i. ஆளுநர் ஆர்.என்.ரவி தலைமை வகிக்கும் இந்த மாநாட்டில், தமிழகம், புதுச்சேரி, கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகள், இயற்கை வேளாண் விஞ்ஞானிகள், இயற்கை வேளாண் பொருள்களை விநியோகிப்போர், விற்பனையாளர்கள் பங்கேற்க உள்ளனர்.
   - ii. மேலும், இந்த மாநாட்டில் நாட்டின் 9 கோடிக்கும் அதிகமான விவசாயிகள் பயன்பெறும் வகையில் பிரதமரின் விவசாயிகள் கௌரவிப்பு (பி.எம்.கிஸான்) திட்டத்தின் கீழ் 21-ஆவது தவணையை பிரதமர் விடுவிக்க இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.
   - iii. நீடித்த சுற்றுச்சூழலுக்கேற்ற மற்றும் ரசாயனம் இல்லாத நடைமுறைகளைப் பின்பற்றுவதை ஊக்கப்படுத் துவதையும், இந்தியாவின் வேளாண் எதிர்காலத்துக்காக சாத்தியமிக்க மற்றும் பருவநிலைக்கு உகந்த பொருளாதார அளவில் நீடித்த மாதிரியாக இயற்கை மற்றும் மீள் உருவாக்கம் செய்யப்படும் வேளாண்மையைத் துரிதப்படுத்துவதையும் இந்த மாநாடு நோக்கமாகக் கொண்டுள்ளது.
3. நெல் கொள்முதலுக்கான ஈரப்பத அளவை 22 சதவீதமாக உயர்த்த வலியுறுத்தி பிரதமர் நரேந்திர மோடிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.
   - i. காவிரி டெல்டா பகுதி மற்றும் பிறமாவட்டங்களில் பெய்துவரும் வடகிழக்குப் பருவமழையைக் கருத்தில்கொண்டு, நெல் கொள்முதலுக்கான ஈரப்பத அளவை 17-இல் இருந்து 22 சதவிதமாக நிர்ணயிக்கும்படி தமிழ்நாடு அரசால் கடந்த அக். 19-ஆம்தேதி மத்திய உணவு மற்றும் பொது விநியோகத் துறைக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது.
   - ii. கடந்த அக். 25 முதல் 28-ஆம் தேதி வரை மூன்று குழுக்கள் தமிழ் நாட்டில் களப்பயணம் மேற்கொண்டு விவசாயிகளிடமிருந்து நெல் மாதிரிகளை சேகரித்தும், இதுவரை நெல் ஈரப்பத தளர்வு கிடைக்கவில்லை.
   - iii. குறுவைப் பருவ கொள்முதல் இதுவரை நடந்து கொண்டிருக்கும் நிலையில்

வடகிழக்குப் பருவமழை மீண்டும் தீவிரமடையும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இது கொள்முதல் செய்யப்படும் நெல்லில் மீண்டும் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே, விவசாயிகளுக்கு நன்மை கிடைக்கும் வகையில் நெல் ஈரப்பத அளவு தளர்வு உத்தரவை விரைவாக வழங்க வேண்டும்.

4. அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பின் காஸா அமைதித் திட்டத்தை ஏற்பது மற்றும் அந்தப் பகுதியில் சர்வதேச அமைதிப் படையை நிறுத்த அனுமதி அளிப்பதற்காக அமெரிக்காவால் தயாரிக்கப்பட்ட தீர்மானத்தை ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் ஏற்றுக்கொண்டுள்ளது.
   i. 15 உறுப்பு நாடுகளைக் கொண்ட கவுன்சிலில் நடந்த இதற்கான வாக்கெடுப்பில், தீர்மானத்துக்கு 13 நாடுகள் ஆதரவு தெரிவித்தன. எதிர்ப்பு எதுவும் இல்லை. சீனா, ரஷியா ஆகிய, எந்தத் தீர்மானத்தையும் ரத்து செய்யும் வீட்டோ அதிகாரம் படைத்த நிரந்தர உறுப்பு நாடுகள் வாக்களிக்காமல் விலக்கிக் கொண்டன.
   ii. இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் மூலம், கடந்த அக்டோபர் 29-ஆம் தேதி அறிவிக்கப்பட்ட டிரம்ப்பின் காஸா போர் நிறுத்த திட்டத்துக்கு ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் முழு அங்கீகாரம் வழங்கியுள்ளது. அந்த அமைதி திட்டம், காஸாவை மறுசீரமைக்கப்பட்ட பயங்கரவாதம் அல்லாத மண்டலமாக மாற்றி, அந்தப் பகுதி மக்களுக்கு நன்மை அளிக்கும் வகையில் மாற்றியமைப்பதை உறுதி செய்கிறது.
5. செயற்கை நுண்ணறிவு (ஏஐ) செயலிகள் சொல்வதையெல்லாம் மக்கள் கண்மூடித்தனமாக நம்பக் கூடாது என்று கூகுளின் தாய் நிறுவனமான ஆல்ஃபாபெட்டின் தலைமை செயல் அதிகாரி சுந்தர் பிச்சை அறிவுறுத்தியுள்ளார்.
6. 2025-ஆம் ஆண்டுக்கான சர்வதேச ஹாக்கி சம்மேளனத்தின் சிறந்த நடுவராக (ஆடவர்) இந்தியாவின் ரகு பிரசாத் அறிவிக்கப்பட்டார். இதுவரை 198 சர்வதேச ஆட்டங்களில் நடுவராகவும், காணொலி நடுவராக 33 முறையும் அவர் பணியாற்றியிருக்கிறார்.
7. தேசிய ரேங்கிங் டேபிள் டென்னிஸ் போட்டியில் ஆடவர் பிரிவில் பயஸ் ஜெயினும், மகளிர் பிரிவில் ஸ்வஸ்திகா கோஷும் சாம்பியன் ஆகினர்.
8. அச்சு ஊடகத்தில் அரசு செலுத்தும் விளம்பரக் கட்டணத்தை 26% அதிகரிக்க மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சகம் ஒப்புதல் வழங்கியுள்ளது.
   i. இது தொடர்பாக மத்திய அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு: அச்சு ஊடகத்தில் அரசு விளம்பரங்களுக்கான கட்டணம் 26 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஒரு லட்சம் பிரதிகளைக் கொண்ட நாளிதழ்களில் கருப்பு வெள்ளை விளம்பரங்களுக்கு ஒரு சதுர சென்டி மீட்டருக்கு வழங்கப்பட்டு வந்த கட்டண விகிதம் ரூ.47,40 என்பது 26 சதவீதம் அதிகரிக் கப்பட்டு ரூ.59.68-ஆக வழங்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. மேலும் வண்ண விளம்பரங்களுக்கான ப்ரீமியம் கட்டணம். சிறப்பிட விளம்பரம் தொடர்பான குழுவின் பரிந்துரைகளுக்கும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
   ii. அச்சு ஊடகம் உள்ளிட்ட பல்வேறு ஊடகங்களில் மத்திய அரசின் அமைச்சகங்கள் மற்றும் துறைகளின் சார்பாக, மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்தின் கீழ் உள்ள ஊடகப் பிரிவான மத்திய மக்கள் தொடர்பகம், விளம்பர வெளியீட்டுப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. அச்சு ஊடக விளம்பரங்களுக்கான கட்டணத்தை கடைசியாக 8-வது கட்டணக் குழுவின் பரிந்துரையின்படி மத்திய மக்கள் தொடர்பகம் 2019-ஆம் ஆண்டு ஜனவரி 9-ஆம் தேதி திருத்தி அமைத்தது. அதன்படி 3 ஆண்டுகளுக்கு இதே கட்டணம் வழங்கப்பட்டு வந்தது. இந்நிலையில், அச்சு ஊடகத்தில் அரசு விளம்பரங்களுக்கான கட்டணத்தை திருத்தி அமைப்பது

தொடர்பாக பரிந்துரைக்க, 2021- ஆம் ஆண்டு நவம்பர் 11-ஆம் தேதி 9-ஆவது கட்டணக் குழு அமைக்கப்பட்டது.

iii. அந்தக் குழு இந்திய செய்தித்தாள்கள் சங்கம், அகில இந்திய சிறு செய்தித்தாள்கள் சங்கம், சிறிய நடுத்தர பெரிய செய்தித்தாள்கள் சங்கம் மற்றும் சம்பந்தப்பட்டவர்களுடன் 2021-ஆம் ஆண்டு நவம்பர் முதல் 2023-ஆம் ஆண்டு ஆகஸ்ட் வரையிலான காலகட்டத்தில் விவாதித்து கோரிக்கைகளைப் பெற்றது.

iv. இதைத் தொடர்ந்து, நியூஸ்பிரிண்ட், ஊதியம், பணவீக்க விகிதம், இறக்குமதி செய்யப்படும் காகிதங்களின் போக்கு, அச்சு செலவினம் போன்ற அம்சங்களை ஆராய்ந்த குழு அதன் பரிந்துரைகளை 2023- ஆம் ஆண்டு செப்டம்பர் 23-ஆம் தேதி சமர்ப்பித்தது.

v. அச்சு ஊடகங்களில் அரசு விளம்பர கட்டணங்களை அதிகரிப்பது அரசுக்கும் ஊடகங்களுக்கும் பல குறிப்பிடத்தக்க நன்மைகளைத் தரும். குறிப்பாக ஊடக தளங்களில் போட்டி அதிகரித்துவரும் இந்த சகாப்தத்தில், அரசு விளம்பரங்களுக்கான அதிக கட்டணம், அச்சு ஊடகங்களுக்கு அத்தியாவசிய வருவாய் ஆதரவை வழங்கும், இதன் மூலம் நீடித்த செயல்பாடு, இதழியல் தரத்தை பராமரிப்பது, உள்ளூர் செய்தி சேகரிக்கும் முயற்சிகளுக்கு ஆதரவு கிடைக்கும் என்று செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.